தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர்-5 திருவள்ளுவராண்டு-2017-சித்திரை-31- 14-5-1986 இதழ்-2

திரு ஜெயகாந்தனுக்கு மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு

தமிழ் இலக்கியப் படைப்புக்களின் தரம் உலகஅளவில் நிலைபெற வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் 'இராசராசன் பரிசு' என்னும் பெயரில் ஆண்டுதோறும் மிகச் சிறந்த இலக்கியத்தைப் படைத்த ஆசிரியருக்கு ஓர் இலட்சத்து ஓர் உருவா பரிசினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்குதற்கு நிறுவியுள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட 'இராசராசன் பரிசு' முதன்முறையாகக் கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கு அவரது 'பாரதசக்தி மகா காவியம்' என்ற நூலுக்கு வழங்கப்பட்டது.

1984-85ஆம் ஆண்டுக்குரிய 'இராசராசன் பரிசு' மிகச் சிறந்த இலக்கியப் படைப்புக்களை உருவாக்கியுள்ள தற்காலஎழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களுக்குத் தமிழக வீட்டுவசதித் துறை அமைச்சர் மாண்புமிகு என்.நல்லுசாமி அவர்கள் 22.4.'86 அன்று மாலை தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாக மொழிப்புலக் கட்டிடத்திறப்பு விழாவினை ஒட்டி நடைபெற்ற சிறப்புநிகழ்ச்சிகளின்போது பொன்னாடை போர்த்தி வழங்கினார்.

பரிசுக்குரிய நூலினைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்ட இந்தியத் தேர்வுக்குழு, தென்னாசியத் தேர்வுக்குழு ஆகிய குழுக்கள் ஒவ்வொன்றும் மூன்று நூல் களைத் தேர்வு செய்தன. அவற்றுள் ஜெயகாந்தன் எழுதியுள்ள 'சுந்தர காண்டம்' என்ற புதினம், இறுதித் தேர்வுக் குழுவால் பரிசுக்குரிய நூலாக ஒருமனதாய்ப் பரிந்துரைக்கப்பட்டது.

'சுந்தரகாண்டம்' என்ற இந்தப் புதினம் 1982ஆம் ஆண்டில் வெளியானது. இது நம் சமூகவாழ்வில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயும் நோக்கில், நடப்பியல் முறையில் எழுதப்பெற்ற ஒப்பற்ற புதினமாகும்.

பரிசளிப்பு விழாவின் போது வீட்டுவசதித் துறை அமைச்சர் மாண்புமிகு என்.நல்லுசாமி பேசுகையில், "பல்வேறுநாடுகளில் தமிழ் பேசும் மொழியாகஇருப்பினும் அதை மறக்கக் கூடிய தன்மையும் பல நாடுகளில் இருக்கின்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மூலமாக உலகில் தமிழ் மொழி பேசும் நாடுகளில் உள்ள தமிழர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்க வாய்ப்பளிக்க வேண்டும். இக் குறிக்கோளை நிறைவேற்றத்தான் தமிழ்ப் பல்கலைக் கழகமும், உலகத் தமிழ்ச் சங்கமும் நிறுவப்பட்டுள்ளன" எனக் கூறினார்.

பரிசுத் தொகைக்கான காசோலையைப் பெற்றுக் கொண்டு சொற்பொழிவாற்றிய திரு ஜெயகாந்தன்இராசராசன் பரிசினைப் பெறுவதில் மகிழ்ச்சியடைவதாகவும், இருப்பினும் இப்பரிசு இருபதாண்டுகளுக்கு முன்னர் கிடைத்திருப்பின் வாழ்க்கையில் போராடும் நிலையிலிருந்ததனக்கு மிகவும் உதவியாக இருந்திருக்கும் என்றும் கூறினார். மேலும், அவர் கூறியதாவது, "சிலரால் தமிழ் மொழி ஏற்றம் பெறும். பாரதியாரால் தமிழ் மொழி ஏற்றம் பெற்றது. அதைப்போல என்னால் தமிழ் மொழிக்குப் பெயர் ஏற்பட வேண்டும். நான் தமிழ் மொழியில் எழுதினாலும், பிற மொழிகளையும் நேசிப்பவன். தமிழில் எழுதும் இந்தியன் நான். இந்தியாவைக்காக்காவிட்டால் தமிழ்நாட்டைக் காக்க முடியாது".

விழாவின் இறுதியில் திரு ஜெயகாந்தன் அவர்களது திரைப்படம் 'உன்னைப் போல ஒருவன்' திரையிடப் பட்டது.

மு. அம்சத்உசேன்.

மொழிப்புலக் கட்டிடத் திறப்பு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் உரு. 42இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மொழிப் புலக் கட்டிடத்தினைத் தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 22.4.'86 அன்று மாலை 6.30 மணியளவில் திறந்து வைத்தார்கள்.

இவ்விழா தவங்கப்படுவதற்கு முன் தேவாரம், சமண இசுலாமிய மற்றும் கிறித்துவப் பக்திப் பாடல்களைப் பல் வேறு மதப்பெரியார்கள் துதி பாடி வாழ்த்துரைத்தனர்.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள தமிழ் மொழிப் புலக் கட்டிடத்தில் இலக்கியத் துறை, மொழியியல்துறை மற்றும் பேரகராதித்துறை ஆகிய துறைகள் செயல்படும்.

மொழிப்புலக் கட்டிடத்தினைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் மேம்பாட்டிற்கென நடப்பு நிதியாண்டிற்கு உரு. 90 இலட்சம் தமிழக அரசு நல்கை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

'தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில்' உரு. 71 இலட்சம் செலவில் உலக உருண்டை வடிவில் அமைக்கப்பட்டுவரும் நூலகத்தை மையமாக வைத்துத் 'தமிழ்நாடு' என்ற எழுத்து வடிவில் ஐந்து புலக்கட்டிடங் களும் அமைக்கப்படவிருக்கின்றன. சுவடிப்புலம் 'த' வடிவிலும், கலைப்புலம் 'மி' வடிவிலும், தமிழ்மொழிப்புலம் 'ழ்' வடிவிலும், அறிவியல் புலம் 'நா' வடிவிலும், வளர் தமிழ்ப் புலம் 'டு' வடிவிலும் கட்டப்படுகின்றன.

விழாவில் பேசிய ஊரகத் தொழிலமைச்சர் மாண்புமிகு ஆனார் ஜெகதீசன் அவர்கள் "தமிழில் சிறப்பெழுத்து 'ழ'கரம். இச் சிறப்பெழுத்தின் வடிவமைப்பில் தமிழ் மொழிப்புலக் கட்டிடத்தினை உருவாக்கியுள்ளது பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியலின் மற்றொரு சாதனையாகும். தமிழகத்திற்கும், சிறப்பாகத் தஞ்சைத் தரணிக்கும் சிறப்பு ஏற்படுத்தும் வகையில் இம் மொழிப் புலக் கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது பெருமைக்குரியதாகும்" எனக் கூறினார்.

"அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் காணப்படும் நவீன முன்னேற்றங்களைத் தமிழ்மொழி மூலம் கற்றறிய வழிவகை செய்ய வேண்டும் எனும் குறிக்கோளோடு தாய் மொழியாம் தமிழை வளப்படுத்துவதே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தலையாய குறிக்கோளாகும்" எனப் பல்கலைக் கழகத் துணைவேந்தரவர்கள்விழாவில் பேசும்போது தெரிவித்தார்கள்.

நூல் வெளியீட்டு விழா

திருவள்ளுவராண்டு 2017 சித்திரை 9-ஆம் நாள் (22.4.'86) செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணியளவில் தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் உள்ள தமிழ் மொழிப் புலக் கட்டிடத் திறப்பு விழாவினை ஒட்டி நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியின்போது வாழ்வியற் களஞ்சியம் (முதல் தொகுதி), சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் (முதல் தொகுதி) ஆகிய இரு நூல்களையும் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட்டார்கள்.

'வாழ்வியற் களஞ்சியம்' முதல் தொகுதியின் முதல் படியைத் தமிழக ஊரகத் தொழிலமைச்சர் மாண்புமிகு ஆனார் ஜெகதீசன் அவர்களும், சங்க இலக்கியப் பொருட் களஞ்சிய முதல் தொகுதியின் முதல் படியைத் தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு து.ரா. இராமசாமி அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

விழாவின்போது பேசிய நிதி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "வாழ்வியற் களஞ்சியம் 14 தொகுதிகளாகவும், அறிவியல் களஞ்சியம் 20தொகுதிகளாகவும் வெளியிடப்படுகின்றன. தமிழ் வளர்ச்சிக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் உழைக்கும் தமிழ்ப் பல்கலைக்கழகம் அவற்றின் மூலம் கிடைக்கும் பலன்களை உலகம் முழுவதும் பரப்பும். இதற்காகவே தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது" எனக் கூறினார்.

வாழ்வியற் களஞ்சிய முதல் தொகுதி மற்றும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சிய முதல்தொகுதி ஆகிய நூல்கள் வெளியாகப் பணியாற்றிய பல்கலைக் கழகப் பணியாளர்களையும், அலுவலர்களையும் மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பாராட்டும் பரிசும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

பன்னாட்டுத் தியான/சான்/சென் மற்றும் தந்திர வாத புத்த மதக் கருத்தரங்கு

காஞ்சிபுரம், தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையத்தில் பன்னாட்டுத் தியான/சான்/சென் மற்றும்தந்திர வாதப் புத்த மதக் கருத்தரங்கு 1986 மார்ச்சு 10 முதல் 16 வரை நடைபெற்றது.

இக் கருத்தரங்கின் தொடக்க விழாவை மார்ச்சு 10-ஆம் நாள் காலை 11 மணியளவில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் தலைமை தாங்கித் தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம், பாரத மாநில வங்கிக் கிளை மேலாளரும், நகர மக்கள் வரவேற்புக் குழுத் தலைவருமான திரு ஆர்.கந்தசாமி அவர்கள் கல்வி அமைச்சரையும் ஆய்வாளரையும் மற்றும் விருந்தினர்களையும் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார் பாகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசும்போது "இக் கருத்தரங்கு இந்தியாவுக்கும் பிற புத்த மதம் தழுவிய நாடுகளுக்குமுள்ள உறவைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள உதவும்" என்று கூறினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் தமது தலைமையுரையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணியினைப் பாராட்டிப் பேசினார். மேலும் பேசுகையில் "இக்கருத்தரங்கு காஞ்சி புரத்தில் பிறந்து வாழ்ந்த போதி தருமரைப் பற்றியும் அவரது வாழ்க்கை, சிந்தனை ஆகியவைபற்றியும்ஆய்வாளர்கள் அதிகமாக அறிந்து கொள்ள உதவும்" என்றார். இக் கருத்தரங்கின்போது மகாமகோபாத்யாய முனைவர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எழுதிய "ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரம்" என்ற தமிழ்ப் பல்கலைக் கழக மறு பதிப்பு நூலை மாண்புமிகு கல்வி அமைச்சர் வெளியிட்டார்.

இராஜ்ய சபா உறுப்பினரான முனைவர்பேராசிரியர் லோகேசு சந்திர அவர்கள் தொடக்கவுரையில் சீனா, சப்பான், கொரியா, மங்கோலியா முதலிய நாடுகளுக்குப் பரவிய தியான புத்த மதம் இக் காஞ்சிபுரத்திலிருந்து தோன்றி மலர்ந்த செய்திகளைச் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவிலிருந்தும் சப்பானிலிருந்தும் வந்து கருத்தரங்கில் கலந்து கொண்ட அறிஞர்கள் 12 கட்டுரைகளை அளித்தனர். இது தவிர மூன்று சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

கருத்தரங்கின் நிறைவு விழா திரு டி.வி. வெங்கட்ராமன், உள்துறைச் சிறப்புச் செயலர் மற்றும் ஆணையர் தலைமையில் நடைபெற்றது. கேரளப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் பேராசிரியர் டி.சரத்சந்திரன், நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். தத்துவ மையத்தின் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் நன்றி நவில விழா இனிதே நிறைவேறியது.

இயக்குநர்,
தத்துவ மையம்.

இராசராசன் பரிசு பெற்ற ஜெயகாந்தன் கருத்தரங்கம்

சிறந்த படைப்பிலக்கியத்திற்காகத் தமிழ்ப்பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் வழங்கும் இராசராசன் பரிசான ஓர் இலட்சத்து ஓர் உருவா 1984-85ஆம் ஆண்டிற்கு எழுத்தாளர் திரு த. ஜெயகாந்தன் அவர்களுக்குவழங்கப் பெற்றுள்ளது.

இப் பரிசினை 22.4.'86ஆம் நாள் மாலை5.30 மணியளவில் ஜெயகாந்தன் அவர்களுக்கு வழங்குவதை ஒட்டி, தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத்துறை சார்பில் 21, 22.4.'86 ஆகிய இரண்டு நாள்களில் திருச்சி-தஞ்சை சாலையிலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதியவளாகத்தில் மொழிப்புலக் கட்டிடக் கருத்தரங்க அறையில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

21ஆம் நாள் காலை 10 மணி அளவில் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் முன்னுரை நிகழ்த்த, ஞானபீடம் பரிசுபெற்ற மலையாள எழுத்தாளர் தகழி. சிவசங்கரப் பிள்ளை அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்தார். பல்வேறு தலைப்புக்களில் 4 அமர்வுகளாகக்கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்ப் பேராசிரியர்களான முனைவர் ந. சஞ்சீவி, முனைவர் தமிழண்ணல், முனைவர் அபிபுல்லா, முனைவர் மீனாட்சி முருகரத்தினம், முனைவர் க. வெங்கட்ராமன், கோவை ஞானி, முனைவர் சி. கனகசபாபதிஆகியோரும் ஆங்கிலப் பேராசிரியர்களான முனைவர் ஜி.ஆர். பாலகிருஷ்ணன், திருச்சி ஆல்பர்ட், பிரம்மராஜன்ஆகியோரும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கில் இன்றைய முக்கிய எழுத்தாளர்கள் பலரும் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். திரு க.நா.சுப்பிரமணியம், தீபம் நா.பார்த்தசாரதி, அசோகமித்திரன், எம்.வி. வெங்கட்ராம், சி.எ.பாலன். ஆகியோரும் கலந்து கொண்டு ஜெயகாந்தன் படைப்புக்களின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து விளக்கினர்.

கருத்தரங்கில் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் பல்வேறு இலக்கியவாதிகளும் திரளாகக் கலந்து கொண்டு கலந்துரையாடினர். இக் கருத்தரங்கில் திரு ஜெயகாந்தன் அவர்களும் ஓர் அமர்வில் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இலக்கியத்துறைஇணைப் பேராசிரியர் முனைவர் து. சீனிச்சாமி அவர்கள் நன்றி உரையுடன் கருத்தரங்கம் இனிது நிறைவுற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 45033/88

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்-613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

நிருவாக அதிகாரி 345
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

உலக விழாவில் தமிழகப் பொம்மலாட்டம் பங்கேற்பு

மேற்கு செர்மனியில் போச்சம் என்ற நகரில் 1986 மே திங்கள் 2ஆம் நாள் முதல் நடைபெறும் அகில உலகப் பொம்மலாட்ட விழாவில் மயிலாடுதுறை "ஸ்ரீ கலாதர் பொம்மை நாடக சபா" தமிழகத்தின் சார்பில் பங்கு பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி அமைப்புக்குப் புரவலராக இந்தியக் கலாச்சார உறவு மையம்(I.C.C.R)இருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத் துறையில் பொம்மலாட்டம் பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி மாணவர் முனைவர் சி.மா.இரவிச்சந்திரன் இக் குழுவை நடத்திச் சென்றுள்ளார். பொம்மலாட்டக் குழுத்தலைவர் திரு ஏ.எஸ். மாணிக்கவாசகம், பொம்மலாட்ட நிகழ்ச்சியை இந்திய-தமிழகப் பாரம்பரியக் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் அமைத்திருக்கிறார். இதுவே தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாட்டிற்குச் செல்லும்முதல் பொம்மலாட்டக் குழு ஆகும்.

தமிழ் உலகிற்குத் தமிழ்ப்பல்கலைக் கழகம் வழங்கும் இரு பெருங் களஞ்சியங்கள்

வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி-1)

உலக வாழ்வியற் பெருங்கடலில் மூழ்கி எடுத்து வழங்கப்படும் முதல் முத்து. தொடராகும் 14 முத்துக் கோவை தமிழ் உலகிற்கு அணிவிக்கப்பட உள்ளன.

இந்த முதல் முத்து:

ஏழு துறைப் பொருள் தலைப்புகளில்,
அகரம் முதல் ஔபெடை வரையில்,
200 அறிஞர் பெருமக்களின் படையல்களாக,
900 கட்டுரைகள்,
1000 பக்கங்களில்,
தக்க நிழல், வரை படங்களுடன்,
அழகிய மறுதோன்றி அச்சில்,
உறுதியான நூற்கட்டமைப்பில்,
கவின்மிகு களஞ்சியமாய் வெளிவந்துள்ளது.

விலை உரூ. 300/-

சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் (தொகுதி-1)

சங்க இலக்கியங்கள் பொருள் ஒளி சிறந்த மணிச் சொற்களின் பெட்டகங்கள். அவற்றின் பெயர்கள் பதித்த மணிப் பதக்கமாக இம் முதற்களஞ்சியம் ஒளிர்கிறது.

இதில்:

பெயர்ச் சொற்கள் அகர வரிசையில்,
அ முதல் ஔ வரை,
முதலில் பொருட் குறிப்பு பெற்று,
தொடர்ந்து பயிலிடங்கள் குறிக்கப்பட்டு,
சங்க நூற் பெயர்கள் பாடல் எண்ணுடன்,
உரிய கருத்து வரிசையில்,
ஒரு பெயர்ப் பல்பொருள் அமைப்பும்,
மரபுப் பொருள்தரும் சொற்களும்,
களஞ்சிய மணிகளாக விளங்குகின்றன.

விலை உரூ. 250/-

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்

முனைவர் உ.வே.சாமிநாதையர்

பிள்ளையவர்களின் மாணாக்கரான உ.வே.சா. அவர்கள் எழுதிய இரண்டு பாகங்கள். இனிய தமிழ் நடை. அரிய செய்திகளின் திரட்சி. தமிழ்ப்பல்கலைக் கழக மறுதோன்றி அச்சில் உருவான மறுபதிப்பு.

திம்மி1/8. பக்கங்கள்: 366. விலை உரூ. 120/-

அறுவைச் சிகிச்சை — நோய் நாடல்

டாக்டர் லெ. சிவராமன்

நோக்கம், நோயினை நிருணயித்தல். தக்க எடுத்துக்காட்டுகள், வரைபடங்கள், X-கதிர்ப்படங்கள், அட்டவணைகள் தரப்பட்டுள்ளன. ஆங்கில மருத்துவ முறையினைத் தமிழில் தெளிவுபடுத்தும் நூல்.

திம்மி1/8. பக்கங்கள்: 515. விலை உரூ. 120/-

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.